REGD. No. M. 6311

PHONE No. [illegible]

தனி இதழ் ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 207

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்.. அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு :
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

சென்னை : தைத் 29உ வியாழன் (11—2—54) ★ ★ ★ வெளியீடு : மாசித் 1உ வெள்ளி (12—2—54)

# சி. ஆர். தர்பாரின் கோர சொரூபம்!

## ஜோதிக்கு எதிராக அறிவொளி!

சென்னை, பிப். 10—

தோழர் எஸ். பி. ஆதித்தன் ராஜிநாமாச் செய்ததால் சென்னை மேல் சபையில் காலியான ஸ்தானத்திற்கு கோவை விஞ்ஞானி ஜி. டி. நாயுடு அவர்களின் சார்பில் இன்று விண்ணப்பப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

மேற்கூறிய ஸ்தானத்திற்கு ஒரு உறுப்பினரை மாநில சட்ட சபை மெம்பர்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்.

ஏற்கனவே அறிவித்துள்ளபடி மதுவிலக்கு மந்திரி ஜோதி வெங்கடாசலம் சார்பில் விண்ணப்பப் பத்திரம் தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

## கோணல் திட்டத்தைக் காக்கப் புதிய கட்டளை

## ஆசிரியர்களின் கருத்துக்கு வாய்ப் பூட்டு!

### மாவட்டம் தோறும் 'சி. ஆர். குஞ்சுகள்'!

சென்னை, பிப். 10—

"ஒரு பள்ளிக்கூடத்தின் தலைமை ஆசிரியரோ, அல்லது ஒரு ஆசிரியரோ தன் கடமைகளைச் செய்வதில் அசிரத்தையாக இருந்ததாக, அல்லது ஒழுங்கீனமாக நடந்துகொண்டதாகக் கண்டால், கல்வி இலாகா டைரக்டர் அதற்கான விசாரணை நடத்தி, சந்தர்ப்பத்தின் தேவைக்கேற்ப குறிப்பிட்ட காலத்திற்கோ, அல்லது நிரந்தரமாகவோ அந்த ஆசிரியர்களை அந்தத் தொழில் புரிய அருகதையற்றவர் என்று கூறலாம்,"

—என்று, இந்த வாரத்திய சர்க்கார் கெஜட்டில், சென்னை கல்வி விதிகளுக்குத் திருத்தங்கள் பற்றிய குறிப்பில் காணப்படுகிறது. மேலே கண்டுள்ள திருத்தம், விதிகளில் தற்போதுள்ள 98 (பி)-க்கு பதிலாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது. விசாரணையின் நிலைமை, 154-வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளபடி இருக்கும்.

டைரக்டரின் உத்திரவுகளை ஆட்சேபித்து, சர்க்காருக்கு மனுச் செய்துகொள்ளவும் வழி வகுக்கப்பட்டுள்ளது.

விதி 154-க்குப் பதிலாகப் பிரசுரிக்கப்பட்டுள்ள மற்றொரு திருத்தம் குறிப்பிடுவதாவது :—

"மாவட்டக் கல்வி அதிகாரியின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள ஆரம்பப் பள்ளிகளில் வேலை பார்க்கும் ஆசிரியர்கள் அல்லது தலைமை ஆசிரியர்களில் ஒருவரின் நடத்தை அல்லது ஒழுக்கம் மோசமானதென நிரூபிக்கப்பட்டால் அல்லது நாச வேலைகளில் ஈடுபட்டதாக அல்லது பங்கு கொண்டதாக நிரூபிக்கப்பட்டால் அல்லது தம் கடமைகளைச் செய்வதில் அசிரத்தையாக இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால், அவரது 'சர்டிபிகேட்'டை டிவிஷனல் இன்ஸ்பெக்டர் எந்தச் சமயத்திலும் 'சஸ்பெண்டு' செய்யலாம். கல்லூரி கிரேடு நீங்கலாக வேறெந்த கிரேடையும் சேர்ந்த ஆசிரியர்களின் சர்டிபிகேட்டுகள் அவ்வாறு அவரால் 'சஸ்பெண்டு' செய்யப்படலாம்."

"மேற்குறிப்பிடப்பட்டுள்ள தவறுகளுக்காக எந்த கிரேடையும் சேர்ந்த ஆசிரியர்களின் சர்டிபிகேட்டுகளை எந்தச் சமயத்திலும் 'சஸ்பெண்டு' அல்லது 'ரத்து' செய்ய டைரக்டருக்கு திருத்தம் அதிகாரமளிக்கிறது."

"ஒரு ஆசிரியர் அல்லது தலைமை ஆசிரியர் ஒரு கோர்ட்டில் தண்டிக்கப்பட்டால் ஒழிய அல்லது அவர்மீதுள்ள புகார்கள் பற்றி எழுத்து மூலமாக அவருக்கு அறிவிக்கப்பட்டு, டிவிஷனல் இன்ஸ்பெக்டர் அல்லது டைரக்டர் அல்லது இவர்கள் நியமிக்கும் அதிகாரியால் பூரணமாக விசாரணை நடத்தப்பட்டால் ஒழிய மேற்கண்ட 'சஸ்பெண்டு' அல்லது 'ரத்து' உத்தரவிடப்படலாகாது."

நடத்தப்பட இருக்கும் விசாரணையின் நிலைமை பின் வருமாறு இருக்கும் :—

"சம்பந்தப்பட்ட ஆசிரியரின் நடத்தை அல்லது தலைமை ஆசிரியரின் நடத்தை அல்லது வேலை பற்றி, மாவட்டக் கல்வி அதிகாரி அல்லது இன்ஸ்பெக்டரால் டைரக்டருக்கு ஒரு பூர்வாங்க அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

டைரக்டர் அல்லது இன்ஸ்பெக்டர், உண்மையிலேயே வழக்கு இருக்கிறது என்று கருதினால், மேற்கொண்டு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை குறித்து, இன்ஸ்பெக்டிங் ஆபீசருக்கு உத்தரவுகள் அனுப்பப்படும். பின்னர், அவர், குற்றப் பத்திரிகை தயாரித்து, எழுத்து மூலமாக விளக்கம் கோரி, அதை சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு அல்லது தலைமை ஆசிரியருக்கு அனுப்பி வைப்பார்.

விளக்கத்தைப் பெற்று, மானேஜரின் குறிப்புகளுடன் தம் குறிப்புகளையும் சேர்த்து, இன்ஸ்பெக்டிங் ஆபீசருக்கு அல்லது டிவிஷனல் இன்ஸ்பெக்டருக்கு அனுப்புவார்.

பின்னர், தண்டனை அளிக்க அதிகாரம் பெற்றுள்ள அதிகாரி, வழக்கின் ஆதாரத்திற்கு ஏற்ற தக்க உத்திரவுகள் பிறப்பிப்பார். பெரும்பாலான வழக்குகளில் நேரடி விசாரணை இருக்காது.

டைரக்டரே முதலில் உத்திரவு பிறப்பித்தால் சர்க்காருக்கும், டிவிஷனல் இன்ஸ்பெக்டர் முதலில் உத்திரவு பிறப்பித்தால் டைரக்டருக்கும் அப்பீல் செய்து கொள்ளலாம்."

# திராவிட நெறி உத்தமரின் உயிரைக் காத்தது!— ஆரிய வெறி அவர் உயிரை குடித்தது!

## திருப்பத்தூரில் என். வி. நடராசன் பேச்சு

திருப்பத்தூர், பிப். 11—

"இந்த சர்க்கார், தென்னாட்டு அரசியல் சரித்திரத்தை கொஞ்சம் புரட்டிப் பார்க்கட்டும்—தென்னாப்பிரிக்காவிலே, காந்தியடிகள் உரிமைப் போராட்டம் நடத்தியபோது, வெள்ளையர்கள் அவர் உயிரைப் போக்க, துப்பாக்கிக் குண்டுகளைப் பிரயோகித்தபோது, அக்கொடிய குண்டுகளை, தன் மார்பின்மீது ஏற்று தன்னுயிரைத் துறந்தாள் தென்னாட்டு உத்தமி தில்லையாடி வள்ளியம்மாள்.

அன்று, காந்தியடிகள் உயிரைத் திராவிடத் தாய் காத்தாள்; இன்று, அதே உத்தமரின் உயிரை வட நாட்டு மத வெறியன் கோட்சே குடித்துவிட்டான். நாம் அத்தகைய கொலைபாதகச் செயல்களில்—காட்டுமிராண்டி செயல்களில் ஈடுபடமாட்டோம். நாம் அறிவுப் பணியைத் தொடர்ந்து ஆற்றுபவர்கள்; சீரிய கொள்கைக்காகவே வாழ்பவர்கள்; லட்சியப் பாதை நோக்கிச் செல்பவர்கள்; எனவே, வெற்றி முரசொலி கேட்கும்வரை, நேர்மையான போராட்டப் பாதையிலிருந்து விலக மாட்டோம்."

—என்று, 7—2—54-ல் வட ஆற்காடு திருப்பத்தூரில் நடைபெற்ற ஐவர் வரவேற்பு—ஆத்தூர்க்குடி நிதி அளிப்பு விழாக் கூட்டத்தில், நன்றி தெரிவித்துப் பேசுகையில், தோழர் என். வி. நடராசன் அவர்கள் குறிப்பிட்டார்.

மேலும் அவர் சொன்னார் :—

கல்லக்குடி அறப் போராட்டத்தில் ஈடுபட்ட நம்மருமைத் தோழர்கள் திருச்சி சிறையில் இன்று காவற் கைதிகளாக வாடுகிறார்கள். அரசியல் பணிக்காக சிறை சென்ற அவர்கள், சாதாரண கைதிகளைப் போலவே நடத்தப்படுகிறார்கள். ஆத்தூர்க்குடி செல்வங்களும் சிறையில் வாடுகின்றன — 91 குடும்பங்கள் தொல்லைக்கு ஆட்பட்டிருக்கின்றன. வெள்ளையன் இந்த நாட்டை ஆண்டபோது அவனை எதிர்த்துப் பேசிய சர்க்கார்—எதிர்த்து எழுதிய சர்க்கார்—இன்று தன்னையே தான் எண்ணிப் பார்க்கத் தவறிவிட்டது—நமது தோழர்களை ஜாமீனில் கூட விட மறுத்து விட்டது.

நமது அருமைத் தோழர்கள் சிறையில் வாடிக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில் சிறை மீண்டு வந்த எங்களுக்கு வரவேற்பு அளிக்கப்படுகிறது. இது எதைக் குறிக்கிறது? போராட்டம் தொடர்ந்து நடைபெறுகிறது—அது முடியவில்லை என்பதையே தெளிவுபடுத்துகிறது—ஒரு பட்டாளம் உள்ளே வதிவதும், ஒரு பட்டாளம் வெளியே உலவுவதுமான போராட்டத் தொடர்ச்சியைத்தான் குறிக்கிறது. இந்த லட்சிய வீரர்களைத்தான் நேரு பண்டிதர் 'காட்டுமிராண்டிகள்,' என்று கூறினார்.

### நாட்டு விடுதலைகோருவது குற்றமா!

உண்மையிலேயே நம் தோழர்கள் செய்த தவறு என்ன? அவர்கள் கொள்ளையடித்தனரா? அதிகாரிகளைக் கொலை செய்தனரா? தண்டவாளங்களைப் பெயர்த்தனரா? இல்லையே! அவர்கள் செய்த குற்றமெல்லாம் உண்மையான நாட்டு விடுதலைக் கோரினர். இந்த குற்றத்திற்குத்தான் கொடுமைக்கு ஆளாயினர். உள்ளம் பதறுகிறது, இக்கொடுமையைக் கேட்க! காண!!

### கும்பமேளா இங்கு நடைபெறுது!

ஆசிய ஜோதி என்று புகழப்படுகிற—உலக அரசியலையெல்லாம் கரைத்துக் குடித்தவர் என்று கருதப்படுகிற நேரு பண்டிதர் வாழுகின்ற அலகாபாத்தில்—கங்கையும், யமுனையும் ஒன்று சேருகின்ற இடத்தில்—கொஞ்ச நாட்களுக்குமுன் கும்பமேளா நடைபெற்றபோது, நடந்த சம்பவங்கள் உலகிற்கே தெரியும். நம்மைப் பார்த்து காட்டுமிராண்டிகள் என்றாரே, நேரு — அவர் ஊரிலே நடக்க இந்த விழாவிற்கு என்ன பெயர்? அது காட்டுமிராண்டித்தனம் மட்டுமல்ல—

(4-ம் பக்கம் பார்க்க)

## இந்தியாவில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் எண்ணிக்கை

### திருவாங்கூர்—கொச்சி முன்னணியில் நிற்கிறது!

புதுடில்லி, பிப். 11—

இந்தியாவில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் எண்ணிக்கை அதிகரிக்க ஆரம்பித்துள்ளது. இந்தியக் கல்வி இலாகா தயாரித்துள்ள புள்ளி விவரங்களிலிருந்து திருவாங்கூர்—கொச்சி மாநிலம் தான் இதில் முன்னணியில் இருந்து வருகிறதென்று தெரிகிறது.

100-க்கு 72 பேர்களுக்கு அந்த மாநிலத்தில் எழுதப் படிக்கத் தெரியும். அடுத்தபடியாக பம்பாய் மாநிலத்தைச் சொல்லலாம்—100-க்கு 46 பேர் இங்கு எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்.

கட்ச் மாகாணத்தில் 100-க்கு 10 பேர்களுக்குத்தான் எழுதப் படிக்கத் தெரியும்.

10 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு, 'எழுதப் படிக்கத் தெரியுமா?'—என்ற தகவல்கள் மீதே இப்புள்ளி விவரங்கள் தயாரிக்கப் பட்டிருக்கின்றன.

பெண்களை மட்டும் தனியாக எடுத்துக்கொண்டால், அவர்களில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் அதிகம் உள்ளது திருவாங்கூர்—கொச்சி மாநிலமே தான்!

1951 மக்கள் தொகை கணிப்பின்படி இந்தியாவில் "காலி தர்கள், கொங்காரிப்பு நிலை யிப்பந்திகள்" ஆகியோரின் எண்ணிக்கை 5,00,000-க்கும் அதிகமாகும்: இவர்களில், 4,80,196 பேர் ஆண்கள்; 80,401 பேர் பெண்கள்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ... அண்ணாதுரை

சென்னை 11—2—1954 வியாழன்

# பிரதமரும் பிரதமரும்!

பண்டித ஜவஹர்லால் நேரு இந்தியத் துணைக்கண்டத்தின் பிரதமராக இருக்கிறார். இங்கிலாந்திலேயே இருந்து உயர்தரக் கல்வியைக் கற்றுத் தேறியுள்ளவர் அவர். பல அறிவியல் நூல்களைக் கற்றுள்ளவர் என்பதில் இரு கருத்து இருக்க நியாயமில்லை. அவருடைய ஆரம்ப அரசியல் வாழ்வில் பொது உடைமை மணம் வீசிக்கொண்டு இருந்தது என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால், அவர் ஒரு காலத்தில் கக்கிய தீவிர தீப்பிழம்புகள் அனைத்தும் வெறும் கரித் துண்டுகளாகப் போய்விட்டுக் கிடக்கின்றன என்பதும் நாம் அறியாததல்ல.

கடவுள், கோயில்களை எல்லாம்கூட இடித்தெறிய வேண்டும் என்று, கனல் தெறிக்க அவர் பேசியுள்ளார். அப்படிப் பேசினதும் தென்னாட்டில்தான்.

ஆனால், அவர் நிலை இன்று பரிதாபத்திற்குரியதாகவே இருந்து வருகிறது. தந்தையார் எலும்பை, அவர் கங்கையில் மூழ்கிக் கலக்கவிட்டபொழுதே, அறிவு உலகத்திற்கு அவர் பெருத்த ஏமாற்றத்தைக் கொடுத்துவிட்டார். எவ்வளவுதான் அவர் அறிவியலைக் கசடறக் கற்று, பிழையறப் பேசினாலும், பண்டிதர் என்ற குல நினைப்பு, அவரை விட்டு முழுதும் தொலைய மறுக்கிறது என்றுதான் நம் போன்றவர் தீர்மானத்துக்கு வர வேண்டியதாகி விட்டது. இப்படி நாம் கூறுவதற்குப் போதிய ஆதாரம் இல்லாமல் போகவில்லை. அவரே, தமக்குள்ள 'பார்ப்பனப் பண்பை', தமது சுய சரிதையில் ஓரிடத்தில் விளக்கமாகக் குறிப்பிட்டுள்ளார். அதாவது, 'என்னுடைய அடி உள்ளத்தில், எங்கோ ஒரு மூலையில், என்னையும் அறியாமல், நூறு அல்லது மேலும் பல ஆண்டுகளாக ஊறி வந்த பார்ப்பனப் பண்பு அழுத்தமாகப் படிந்துபோய் இருக்கிறது' என்று பண்டிதரே ஒப்புக்கொண்டுள்ளார். எனவே, அவரே ஒப்புக்கொண்டுள்ள அவரிடத்தில் உள்ள பிறவிப் பண்பை, நாம் சுட்டிக் காட்டுவதில் பிறருக்கு சிற்றம் பிறக்கத் துளியும் இடம் கிடையாது. அவரிடம், இந்த வகையில் நாம் காணும் குறைபாட்டில் அவநம்பிக்கை கொள்ளவும் பிறருக்கு வகை கிடையாது.

அவர், தந்தையார் எலும்பை கங்கையில் விட்டாலும், கும்பமேளாவைக் கண்டு களித்தாலும், சைவத் தம்பிரானின் சிவசொரூப ஆசீர்வாதத்தைப் பெற்றாலும், அவர் தம்மையும் அறியாமல் ஒவ்வொரு சமயம், அறிவியல் பிரசாரமும் துணிந்தாற்போலச் செய்யக் கிளம்பிவிடுகிறார். குறிப்பிட்ட அளவுவரையில், அவர் சொல்லை நாம் பொருட்டாக மதித்துப் பேச வேண்டியதாகத்தான் இருக்கிறது. அப்படி அவர் ஓரோர் சமயங்களில் அறிவுத் துறையை வலியுறுத்திப் பேசுவதுகூட, மற்ற நாட்டவர் கருத்துக்கு மயக்கமூட்டும் அரசியல் நிபுணத்துவமாக இருந்தாலும் இருக்கக்கூடும். அல்லது உண்மையை உறுதியாக அவர் கூறுவதாக இருந்தாலும் இருக்கக்கூடும். அறிவியல் பேசுவதற்கு, எதை அவர் நோக்கமாகக் கொண்டிருந்தபோதிலும் அவர் பகுத்தறிவுக்கு சிறப்பளித்துக் கூறுவதை நாம் கருதத் தவறிவிட மாட்டோம். நிற்க.

திருவாங்கூர் தேர்தல் பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்டுள்ள பண்டிதர், கோட்டயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் "சூரிய-சந்திர கோள்களுக்கும் மனிதனின் செயல்களுக்கும் எந்தவிதத் தொடர்பும் கிடையாது" என்றும், "மனிதராகப் பிறந்தவர்கள் தங்களுடைய எதிர்காலத்தைத் தாங்களேதான் ஆக்கிக்கொள்ள வேண்டுமேயல்லாது, தூரத்தில் உள்ள கோள்களால் ஆக்க முடியாது என்பதில் நம்பிக்கை வைத்திருப்பவன் நான்" என்றும், "நீங்களும், நானும், மற்ற எல்லோரும் சேர்ந்துதான் நவ இந்தியாவை உருவாக்கப்போகிறோம்; பிரார்த்தனையால் நாம் அதை உண்டாக்கப்போவதில்லை; ஆனால், நமது அரிய உழைப்பினால்தான் உருவாக்கப் போகிறோம்" என்றும் விளக்கமாகக் கூறியுள்ளார். இப்படிக் கூறியதின்மூலம் பிரார்த்தனையில் தமக்கு அறவே நம்பிக்கை கிடையாது என்பதை பண்டிதர் எடுத்துக் காட்டியுள்ளதோடு, பிரார்த்தனைக்கு எந்தவித ஆற்றலும் கிடையாது என்றும் அழுத்தம் திருத்தமாகக் கூறியுள்ளார். இப்படி இருக்கிறது இந்தியப் பிரதமரின் போக்கு!

ஆனால், சென்னைப் பிரதமரான அன்பர் ஆச்சாரியாரின் போக்கோ, இதற்கு நேர்மாறானதாக இருப்பதை நாம் காண்கிறோம். எதற்கெடுத்தாலும், ஆச்சாரியார் 'பிரார்த்தனை பிரார்த்தனை' என்று வலையிடுகிறார். மாரியாத்தாள் சிலையாக இருந்தாலும், 'நான் திறந்து வைக்கிறேன்' என்று அழைப்பில்லாமலே ஆஜராகி வருகிறார்.

பிரார்த்தனையால் பலன் கிடையாது என்று பிரதமர் நேரு கூறுகிறார்; பிரார்த்தனைதான் எல்லாவற்றிலும் முக்கியம், முதன்மை என்று பிரதமர் ஆச்சாரியார் ஓலமிட்டுக் கொண்டு இருக்கிறார். இருவருடைய கண்ணோட்டத்திலும் பெரிய அளவில் முரண்பாடு இருக்கிறது. இந்த இருவர் சொல்லையும் கேட்கும் சாதாரண மக்கள் குழப்பத்திற்குள்ளாகாமல் எப்படி இருக்க முடியும்?

முரண்பட்ட பேசும் விவகாரம் இவர்கள் இருவரோடு மட்டும் முடிந்துவிட்டதாக எவரும் எண்ணத் தேவை இல்லை. காங்கிரஸ் ஆளவந்தார்கள் அனைவராலும் பேசப்படும் பேச்சுகள் அனைத்தும் இந்த முரண்பாட்டின் மீது கட்டப்பட்டுள்ளதுதான். இவர்களோடு மட்டிலாவது இந்த முரண்பாடு வரலாறு முற்றிற்று என்றால், அந்தக் கேடு மில்லை. இந்த ஆளவந்தார்களுடைய அதிகாரத்தின்கீழ் பணி புரிகிறார்களே உயர்ந்த அதிகாரிகள், நிபுணர்கள், அவர்கள் அனைவரிடத்திலும்கூட நாம் காணக் கிடப்பது இந்த முரண்பாடுதான்.

பிறவிக் குருடர்களாக இந்த ஆளவந்தார்கள் உள்ளவரை இவர்களிடத்தில் கிடைத்த யானை, உலக்கைபோல் இருந்ததிலும், முறம்போல் இருப்பதிலும், துடைப்பம்போல இருப்பதிலும் வியப்பொன்றுமில்லை.

பொருளற்ற கற்பனைச் சொற்களை சிருஷ்டித்துக் கொண்டு அவைகளுக்கும், ஜீவராசிகளுக்கும் உள்ள தொடர்பு என்ன என்று ஆராய்ந்து ஆராய்ந்து அலுத்துப்போன தத்துவ சாஸ்திரிகளின் வழித் தோன்றல்கள்தானே இந்த ஆளவந்தார்கள்! இவர்களிடத்தில் முன்னுக்குப் பின் முரண் இல்லாத பொருத்தமான கொள்கையை எங்கிருந்து எதிர்பார்ப்பது?

# மத்திய அரசும், மாநில அமைப்புக் குழுவும்

## டாக்டர் லங்காசுந்தரம் எச்சரிக்கை!

கல்கத்தா, பிப். 9—

"மாநில புனரமைப்புக் கமிஷன், நல்ல முறையில் வேலைசெய்ய வேண்டுமானால், இந்திய அரசாங்கம், 'ஆங்காங்கே எழுந்துள்ள எல்லைத் தகராறுகளையும் கமிஷன் விசாரணை செய்யும்,' என்பதையும் கமிஷனின் வேலைகளோடு சேர்த்ததாக வேண்டும். இல்லாவிடில், நாட்டிலே ஏற்பட விருக்கும் ஒரு பெருங்கொந்தளிப்பைத் தவிர்க்க இயலாது."

இவ்வாறு, அகில இந்திய மொழிவாரி மாநில அமைப்பு மாநாட்டுத் தலைவர், டாக்டர் லங்காசுந்தரம் எச்சரித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

"பசல்அலி கமிஷன் ஒரு எல்லை நிர்ணயக் கமிஷன் அல்ல; அது ஒரு வெறும் விசாரணைக் கமிஷன்; அந்தக் கமிஷன் இப்போது தன் வேலையைத் துவங்கியிருக்கிறது. சில குறிப்பிட்ட பிரதேசங்களின் எல்லையை நிர்ணயிக்கும் பொறுப்பையும் அதனிடம் ஒப்படைப்பதற்கு இந்திய அரசாங்கத்திற்கு எவ்விதக் கஷ்டமும் இருக்கக்கூடாது"

# மத்திய சர்க்கார் வரவு - செலவுத் திட்டம்

—::—

## சென்னை சர்க்கார் செய்யப் போவதென்ன?

சென்னை, பிப். 11.

மத்திய சர்க்கார் வரவு-செலவுத் திட்டம் குறித்து, இன்னும் ஹேஷ்யங்கள் வெளியாகவில்லை என்றாலும், பாதுகாப்புச் செலவு காரணமாக உபரி அதிகமிராது என்றும், சுங்க வரி, வருமான வரி மூலம் கிடைக்கும் வருமானம் குறைவதால், கஷ்டமுள்ள வரவு-செலவுத் திட்டமாகவே இருக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மாநில சர்க்கார்கள் புது வரிகளைப் போட்டு தங்கள் வருவாயைப் பெருக்க முயற்சிக்கலாம்.

சென்னையைப் பொறுத்தவரையில் புது வரிகளைப் பற்றிய பயம் இப்போது முன்நிற்கக் காணோம்; ஆனால், தோட்டக் கம்பெனிகளுக்கு விவசாய வருமான வரி விதிக்க சென்னை சர்க்கார் முற்படலாம் என்று சிலர் சொல்கிறார்கள்.

## மருந்துகள் உற்பத்தி தொழிற்சாலைகள்

—:-:—

### இந்தியாவில் ஏற்படுத்த ஜப்பானியர் முயற்சி!

கல்கத்தா, பிப். 10—

ஒஸாகா வைத்தியத் தூதுக் குழுவின் இந்திய விஜயம் வெற்றி ஏற்பட்டால் ஜப்பான் வைத்திய மருந்துகள் உற்பத்தி தொழிற்சாலைகள் இந்தியாவில் ஏற்படலாம்.

# கல்லூரி ஆசிரியர்கள் சம்பளம்

## இந்தியாவின் புள்ளி விவரம்

புதுடில்லி, பிப். 11—

இந்தியாவிலுள்ள கல்லூரி ஆசிரியர்களில் ரூ 150 முதல் ரூ 200 வரை சம்பளம் வாங்குபவர்கள் தொகை அதிகம் என்றும், இவர்கள் சுமார் 7,40,600 பேர் இருப்பதாகவும் புள்ளி விவரங்களிலிருந்து தெரியவருகின்றன.

ரூ. 100 முதல் ரூ. 150 வரை சம்பளம் வாங்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 6,03,300. ஆகும்.

ரூ 250 முதல் ரூ. 450 வரை சம்பளம் வாங்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 5,18,600 ஆகும்.

ரூ 450 முதல் ரூ 650 வரை சம்பளம் வாங்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 1,33,300 ஆகும்'

ரூ 650 முதல் ரூ. 850 வரை சம்பளம் வாங்குபவர்கள் 53,400 பேர்; ரூ. 850 முதல் ரூ 1,000 வரை சம்பளம் பெறுபவர் 24,000 பேர்.

எல்லாவற்றையும் சேர்த்து மொத்த ஆசிரியர்களின் எண்ணிக்கை 21,31,000.

# "ஆங்கிலத்தைக் கட்டுப்படுத்துவது அபத்தமானது"

(:)

## பம்பாய் அரசினர் போக்கை கண்டிக்கிறார் படேல்

அகமதாபாத், பிப். 10—

"ஆங்கிலோ இந்தியர், ஆசியால்லாதார்களை ஆங்கிலம் கற்கும் பள்ளிகளில் சேர்த்துக் கொள்வதைக் கட்டுப்படுத்தி பம்பாய் சர்க்கார் வெளியிட்டுள்ள அறிக்கை, உலகிலேயே அபத்தமானது; அந்தச் சுற்றறிக்கை பயனற்றுப் போக நான் எல்லாக் காரியங்களையும் செய்வேன்,"

—என்று, பம்பாய் பிரதேச காங்கிரஸ் கமிட்டித் தலைவர் குறிப்பிட்டுள்ளார். மேலும், அவர் சொன்னார்:

"எந்த மொழியும் வெளிநாட்டு மொழியல்ல; இந்தியாவின் ஒற்றுமைக்கு வழி காட்டும் ஆங்கிலம் வெளிநாட்டு மொழியாகாது; ஆகவே, ஆங்கிலம் கற்பிக்கும் பள்ளிகளுக்கு, இந்திய மாணவர்களைச் சேர்க்கக் கூடாதென்று தடை செய்வதோ, கட்டுப்படுத்துவதோ கூடாது.

"உருதுவைப்போல ஆங்கிலமும், சரித்திரத்தின் வளர்ச்சியால் வந்தது ஆகவே, அதை இந்தி மொழியில் ஒன்றெனக் கொள்ள வேண்டும்; பெற்றோர்களுக்கு, தங்கள் குழந்தைகளுக்கு எந்த மொழியில் பாடம் கற்றுக் கொடுக்க வேண்டுமென்று தேர்ந்தெடுக்க எல்லாவித உரிமையும் உண்டு.

இந்த உத்தரவின் காரணத்தால், அடுத்த தேர்தலில், காங்கிரஸ், ஆயிரக்கணக்கான வாக்குகளை இழந்துவிடும்," என்று எச்சரித்தார்.

# பாகிஸ்தானுக்குக் கடன் உதவி

லண்டன், பிப் 10—

காமன்வெல்த் அபிவிருத்தி நிதி கம்பெனி, பாகிஸ்தானின் 'குலி கான் டிரான்ஸ்மிஷன்' திட்டத்திற்காக 10 லட்சம் பவுன் கடன் உதவி அளிக்க முன்வந்துள்ளது இக் கம்பெனி, இரண்டு ஆண்டுகட்கு முன்னர் தான் ஆரம்பித்து வைக்கப்பட்டது 'பாங் ஆப் இங்கிலாந்து', இந்தக் கம்பெனியை ஆதரிக்கிறது.

# ஆங்கிலத்தை அலட்சியம் செய்வதா?

## முன்ஷியின் கருத்து

புதுடில்லி, பிப். 10—

"ஆங்கிலம் நமக்குச் சொந்தமானது; ஆகவே, ஆங்கிலத்தை அலட்சியம் செய்வது குற்றமாகும்; உலகம் முழுவதும் நமது கொள்கைகளைப் பரப்ப நம்மிடமுள்ள ஒரே ஆயுதம் இதுதான்; ஆங்கிலத்தை மறப்பதால் நம் பழமையையும், எதிர்கால விதியையும் நாசமாக்கிக்கொண்டவர்களாவோம்; இதன் மூலமே நம்மை உலகம் முழுமையும் அறிந்துகொள்ள உதவ முடியும்,"

என்று, கே. எம். முன்ஷி புதுடில்லி ரேடியோ நிலயத்திலிருந்து பதிவு செய்யப்பட்ட பிரசங்கம் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

★

# பம்பாய் சர்க்காரின் கல்விக் கொள்கை

## நேருவின் எதிர்ப்பு

பம்பாய், பிப். 10—

பம்பாய் சர்க்காரின் கல்விக் கொள்கையை பிரதமர் நேரு எதிர்ப்பதாக பம்பாய் பிரதேச காங்கிரஸ் கமிட்டித் தலைவர் படேல் தெரிவித்தார்.

இராணுவத்தில் சேர்ப்பதற்கு நடத்தப்படும் தேர்வுகளை இந்தியில் எழுதலாமென பம்பாய் சர்க்கார் அதிகாரி ஒருவர் நேருவிடம் யோசனை கூறியதற்கு, "அது சாத்தியமில்லை; இராணுவத்தைப் பற்றிய புத்தகங்களெல்லாம் ஆங்கிலத்தில் தான் உள்ளன; இந்தியில் ஒரு புத்தகமும் கூட இல்லை" என்று அவர் கூறிவிட்டதாக படேல் மேலும் குறிப்பிட்டார்.

# ஆச்சரியப்படுகிறதாம் அமெரிக்கா!

லண்டன், பிப். 10—

பாகிஸ்தானுக்கு இராணுவ உதவி அளிப்பது சம்பந்தமாக இந்தியா ஆட்சேபங்கள் எழுப்புவதைக் கண்டு அமெரிக்க அரசாங்க இலாகா மிகவும் ஆச்சரியப்பட்டுள்ளதாகவும், இத்தகைய உதவி காரணமாக இந்தியாவிற்கு ஆபத்து நேராது என்பதுபற்றி உறுதியளிக்க ஏதாவது செய்யப்படலாம் என்றும் செய்திகள் கூறுகின்றன.

# கருவூலம்

திராவிடத்தின் கருவூலமெனக் கருதப்படுகிற நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் பற்றி மகிழ்ச்சி தரத்தக்க செய்திகள், தொடர்ந்து நமக்குக் கிடைத்தபடி உள்ளன. தென்னாட்டின் பொருளாதார நிலை உயரவேண்டுமென்ற, நல்ல உள்ளம் படைத்தோர் இதைக்குறித்து மகிழ்ச்சி தான் செய்வர்.

'திராவிட நாடாவது, தனித்து இயங்குவதாவது' என்று பேசி வருபவர்களுக்கு நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம் உள்ளூர அதிர்ச்சியை உண்டுபண்ணி வருகிறது.

சென்னை அரசியலாரின் கைத்தொழில் இலாகா செயலாளர் லோபோ பிரபு நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தை நேரில் சென்று பார்வையிட்டு, பல ரசமான செய்திகளைத் தந்திருக்கிறார்.

ஒன்பது மாதங்கட்கு முன் ஆரம்பிக்கப்பட்ட சுரங்க வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகிறது; திறப்பு விழா நடத்திய இடம், இப்போது, அறுபது அடி ஆழத்திற்கும் போய்விட்டது. அடியில் தண்ணீர் இருந்தால் வேலையின் துரிதம் பாதிக்கப்படுமோ என்று தோன்றிய அச்சம், இப்போது அறவே அழிந்துபட்டது. தரை மிக விரைவில் கெட்டியாகி வருகிறது.

முதல் முயற்சியில் 20 ஆயிரம் டன் பழுப்பு நிலக்கரி கிடைக்குமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இதைவிட அதிகமாக—நான்கு மடங்கு அதிகமாகக் கிடைக்குமென ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்களாம்!

ஜெர்மன் நாட்டில் நம்மைக் காட்டிலும் மூன்று மடங்கு அதிகமாகத் தோண்டி டன்னுக்கு ரூ 5 செலவில் எடுக்கிறார்கள். நமது செலவு டன்னுக்கு ரூ 10லிருந்து ரூ. 15க்குள் இருக்குமாம்.

பொருளாதார பயிலினத்தால் கூனிக் குறுகிப் போயிருக்கும் தென்னாடு, நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தால் நெஞ்சை நிமிர்த்தி நிலைப்பிற்கேற்ப, நிலையை உயர்த்திக்கொள்ளப் போகிறதென்று கூறுகிறார் லோபோ பிரபு.

தற்போது டன் ஒன்றுக்கு ரூ. 27 முதல் ரூ. 40 வரை செலவு செய்து சிங்கரேணியிலிருந்தும், சாரியாவிலிருந்தும் நிலக்கரி இறக்குமதி செய்தாலும், தேவைக்கேற்ற அளவு, தேவைப்படும் காலத்தில் கிடைப்பதில்லையாம்—இதுவும் லோபோவின் வாய்மொழிதான். நெய்வேலிச் சுரங்க வேலைகள் முடிந்தவுடன் மிகப்பெரிய மின்சார நிலையங்களும், மேலும் டார் பிரமிக்கும் பொருள்களும் உற்பத்தி செய்யலாமென்கிறார்.

40 லட்சம் டன் கரியிலிருந்து 5 கோடி காலன் எண்ணெய் எடுக்கலாமெனக் கணக்கிடப்பட்டிருக்கிறது. இதைத் தவிர விலையுயர்ந்த மெழுகும் கிடைக்கப்பெறும் எனச் சொல்லப்படுகிறது. இதன் விலை அமெரிக்காவில் டன் ரூ 1,000.

நெய்வேலிச் சுரங்கத்தில் முடிவாக ஆண்டுக்கு 45 லட்சம் டன் கரி எடுக்க ஏற்பாடு செய்ய முடியுமாம். ஆண்டுக்கு 50 லட்சம் டன் எடுத்தால்கூட 400 ஆண்டு சட்டு தாக்கூடிய அளவு பூமிக்கடியில் புதைந்து கிடக்கிறதாம் பழுப்பு நிலக்கரி.

—சேலம் மாவட்டத்தில் இரும்பு கிடைக்க வசதிகள் தென்பட்டிருக்கின்றன. திராவிடத்தில், இனி எங்கெங்கு என்னென்ன சுரங்கங்கள் தென்படுமோ, தெரியவில்லை!

### வேதனை தரும் எண்ணிக்கை!

வாஷிங்டன், பிப். 10—

கொரியாவில் நடைபெற்ற போரில் இதுவரை 30,722 அமெரிக்க வீரர்கள் மாண்டிருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

# தூத்துக்குடி சதி வழக்கு நிதி வசூல்

| | |
|---|---|
| முன் தொடர்ச்சி ரூ | 13,648—15—8 |
| உறையூர் கு பழனிசாமி மூலம் :— | |
| „ கு பழனிசாமி | 3—0—0 |
| „ எம். கருப்பண்ணன் | 1—0—0 |
| „ ஏ முத்துசாமி | 1—0—0 |
| „ இரா. ராசன் | 1—0—0 |
| „ என். சுப்ரமணியன் | 1—0—0 |
| „ டி. எஸ். பாலசுப்ரமணியன் | 1—0—0 |
| „ எஸ் பெருமாள் | 1—0—0 |
| „ டி. பி. மாசிலாமணி | 1—0—0 |
| „ வேலுபிள்ளை, மாணிக்கம், முத்தியாலு, தாமோதரன், நடராசன், கணேசன், வி. முத்துசாமி கெ. முத்துசாமி, அமிர்தலிங்கம், தம்புராசு, அப்பு, தங்கவேலு, ராமு, சாமிக்கண்ணு, வகாப், பெரமைக்கால், ராசசேகரன், கோவிந்தன், அமரசாமி, கிருஷ்ணசாமி, கணேசன், ஆறுமுகம், பசுவய்யா, சின்னையன் கவுண்டர் ஆகியோர் | 9 14—0 |
| பாலம்ராஜாக்கப்பட்டி (திண்டுக்கல்) தி. மு. கழகத் தோழர்கள் | 5—0—0 |
| மணப்பாறை அ. பழனிச்சாமி | 1—0—0 |
| கன்னக்குளத்தூர் கே. எம். பட்டாபிராம் | 1—4—0 |
| தோழர் ஏ வி. பி. ஆசைத்தம்பி மூலம், பெங்களூர் வட்டாரத்தில் வசூலானவை :— | |
| பெங்களூர் பிளாக்பள்ளி தி. மு. கழகம் | 11-14—9 |
| „ வேதகிரி | 2—6—0 |
| „ அல்சூர் முயற்சி மன்றம் | 5—8—0 |
| „ பி. கமலநாதன் | 1—0—0 |
| „ கே. குருசாமி, லட்சுமணபுரி தி மு கழகம் | 1-15—3 |
| மதுரை முனிச்சாலை ரோடு மஜீத் நினைவுப் படிப்பகத்தார் | 15—0—0 |
| சென்னை ஜி. ராமசாமி, அருப்புக்கோட்டை தி. மு. கழகத் தோழர்கள் | 5—8—0 |
| சென்னை—35-வது வட்டம் தி. மு. கழகம் சா. கணேசன் | 10-10—0 |
| திருவனந்தபுரம்—மரப்பாலம் திருமதி லீலாவெற்றிவேல் | 2—0—0 |
| மாயவரம் தி. மு கழகச் சார்பில் 31—1—54-ந் தேதி நடந்த கூட்டத்தில் அண்ணா அவர்களிடம் மாயவரம் தி மு. கழகம் கொடுத்த பணமுடிப்பு | 501—0—0 |
| தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சுற்றுப் பயணத்தில் வசூலானவை :— | |
| பீளமேடு வெங்கடேசன், முத்துகேசன், வேலாயுதம், நாராயணசாமி, பழனிச்சாமி, அரசு ஆகியோர் | 3—0—0 |
| கோயமுத்தூர் பொதுக்கூட்டத்தில் ஏ. ஆர். சவரிமுத்து | 2—0—0 |
| கே. என். மணி, அய்யாசாமி | 1—4—0 |
| எம். கனகரத்தினம், 16-வது வார்டு காசு மாலை | 1-10—9 |
| வீகோலா தி. மு. கழகம் | 1—1—3 |
| டெரியநாய்க்கன் பாளையம் தமிழன் படிப்பகம் | 15—0—0 |
| அத்திப்பாளையம் தி. மு. கழகம் | 4—9—0 |
| வெள்ளக்கோயில் பொதுக்கூட்ட உண்டி வசூல் | 22—7—3 |
| சேலூர் தி. மு. கழகம் | 10—0—0 |
| திருப்பூர் மில் தொழிலாளர் பகுத்தறிவுப் படிப்பகம் | 1-15—3 |
| „ பொதுக்கூட்ட உண்டியல் வசூல் | 5—0—9 |
| பாப்பநாய்க்கன் பாளையம் பொதுக்கூட்டத்தில் ஸ்டேன்ஸ் மில் தொழிலாளர்கள் | 20—0—0 |
| நீலகிரி—குன்னூர் பர்ன்சயிட் எஸ்டேட் தொழிலாளர்கள், அனுதாபி | 2—4—0 |
| „ ராப்ராய் எஸ்டேட் தொழிலாளி | 5—0—0 |
| 31—1—54-ல் மாயவரம் பொதுக் கூட்டத்தில் அ. பொன்னம்பலனார் அவர்களிடம் கொடுத்தவை :— | |
| பெரம்பூர் தி. மு கழகம் கே. சுப்ரமணியன் மூலம வசூலானவை | 34—8—2 |
| செம்பனூர் கோயில் தி மு கழகம் | 1—9—3 |
| கூறைநாடு நகராண்மைக் கழக உயர்நிலைப்பள்ளி | 1—9—3 |
| விளநகர் ராமச்சந்திரன் | 1—0—0 |
| எலர்தங்குடி தி. மு. கழகம் | 5—1—0 |
| இலனூர் தி. மு கழகம் | 5—7—9 |
| அண்ணா அவர்களிடம் கையெழுத்து வாங்கிய அன்பர்கள் | 7—4—0 |
| சிங்கப்பூர்—2 தோழர் ரா. மு. மாரிமுத்து மூலம் :— | |
| „ என். மாறப்பன் | 10—8—0 |
| „ கொ. சி. வீரப்பன் | 7—8—0 |
| „ ரா. மு. மாரிமுத்து | 7—8—0 |
| „ ரா. மாறப்பன் | 7—8—0 |
| „ கே. என். இராவணன் | 7—8—0 |
| „ என். பி. தர்மலிங்கம் | 7—8—0 |
| „ கா. க. இராமையா | 7—8—0 |
| „ பி. சுப்பையா | 4—8—0 |
| „ மு. செல்லப்பன் | 4—8—0 |
| „ எஸ். கிருஷ்ணன் | 8—0—0 |
| „ எல். கே. பெருமாள் | 3—0—0 |
| „ கே. கவுண்டியப்பன் | 3—0—0 |
| „ வி முத்தையா | 3—0—0 |
| „ பெதரி | 8—0—0 |
| „ க. ராமு | 3—0—0 |
| „ வே. முத்துசாமி | 1—8—0 |
| „ நாக. வாலையன் | 1—8—0 |
| சோலையார்—கல்லார் எஸ்டேட் தொழிலாளர்கள் | 6—0—0 |
| தோழர் ஈ வெ. கி. சம்பத் மூலம் :— | |
| தென்மாப்பட்டு வைக்கம்வீரர் படிப்பகம் | 21—0—0 |
| திருப்பத்தூர் (ராமநாதபுரம்) இக்பால் வாசகசாலை | 11—0—0 |
| திருச்சி தெப்பக்குளம் தி. மா. மு. கழகச் செயலாளர் தோழர் எழிலன் மூலம் | 200—0—0 |
| மதுரை—தமிழ்நாடு பாலிடெக்னிக் மாணவர்கள் | 21—0—0 |
| உசிலம்பட்டி அ ஞானப்பிரகாசம் | 1—6—0 |
| திருவண்ணாமலை தி மு கழகப் பொதுக் கூட்ட வசூல் தோழர் ப. உ. சண்முகம் மூலம் | 8—6—0 |
| சென்னை—மயிலை ஆர். திராவிடமணி | 1—0—0 |
| „ ஏ. தாண்டவன் | 1—0—0 |
| „ வி. கணபதி | 1—0—0 |
| „ டி. ரங்கசாமி | 1—0—0 |
| „ கே. ராமன் | 1—0—0 |
| „ எஸ். ராமசாமி, ஏ. டேவிட், ஏ. பி. ராமன் | 1-12—0 |
| „ கோதண்டம் | 4—8—0 |
| ஆக மொத்தம் ரூ. | 14,750—3—4 |

### பொங்கல் விழா

7—2—54 மாலை குளவட்ட தி. மு. கழகச் சார்பில், தோழர் சு. பாலன் இல்லத்தில் கழக உறுப்பினர்களுக்கு, தேநீர் விருந்துடன், பொங்கல் விழாக் கூட்டமும் நடைபெற்றது விருந்திற்கும், கூட்டத்திற்கும் தோழர் முகவை—ஆர். எஸ். பாண்டியன் தலைமை தாங்கி, 'பொங்கல் விழா' என்ற தலைப்பில் பேசினார். கழகத் தோழர்கள் பலர் பேசிய பின் தோழர் சு. பாலன் நன்றி கூறினார்.

### ஜோதி குக நிலையம் ஆனந்த ஆசனப் பயிற்சி சாலை

1—2—54 மாலை 6 மணிக்கு பயிற்சி சாலையின் 5-வது ஆண்டு விழா, தோழர் ஆர். நடராசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சி. ஆர். சங்கமேஸ்வரன் பயிற்சிசாலை மாணவர்கள் ஆசனங்களின் மேன்மையைப் பற்றி பேசினர்.

பயிற்சிசாலை மாணவர்களால் பலவிதமான ஆசனப் பயிற்சிகளும், பேலன்ஸ், மல்கம்பம், பார் முதலான விளையாட்டுகளும் செய்து காண்பிக்கப்பட்டது.

### அன்பழகன் இலவச படிப்பகம்

மதுரை, பிப். 8—

3—2—54ல், 9 மணிக்கு தோழர் வி. குருசாமி தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் தோழர் கண்ணதாசன் குழுவினரின் தண்டனையைக் கண்டித்தும், அவர்களை விடுதலை செய்யக் கோரியும், பொங்கல் விழா. படிப்பக வரவு—செலவு கணக்கு ஒப்புக்கொள்ளப்பட்டும், பொதுச்செயலாளர் அண்ணாதுரையிடம் கல்லக்குடி நிதிக்காக பணம் வசூலித்து கொடுப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

### கடலூர் ஆதி திராவிடர் நல உரிமைக் கழகம்

கடலூர், பிப். 8—

4—2—54 மாலை 6 மணிக்கு திருப்பாபுலியூர், தானஞ்சேரி ஆதி திராவிடர் நல உரிமைக் கழக முதலாண்டு விழா தோழர் ஜி. தேவஞானசுவாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ம. அரங்கநாதன், ஆ. சி. ரங்கசாமி, கணேசன், முத்துசாமி, இராசாங்கம் ஆகியோர் பேசினர்.

### தற்கொலைகள்—ஒரு விசித்திரம்!

டோகியோ, பிப். 10—

ஜப்பானில் வாரத்திற்கு 400 பேர்கள் குறையாமல் தற்கொலை (ஹராகிரி) செய்துக் கொள்கிறார்கள். 1951-ம் ஆண்டு முதற்கொண்டே வாரா வாரம் இந்த நிலைதான் தொடர்ந்து இருந்து வருகிறது.

யுத்தத்திற்கு முன்பு தற்கொலை செய்துக் கொள்வது ஒரு கௌரவமாகக்கூட கருதப்பட்டு வந்தது. சடங்குகளுக்குப் பிறகு கடலில் குதிப்பது, எரிமலை வாயிற்குள் குதித்து விடுவது—இவை எல்லாம் பழைய தற்கொலைமுறைகள்.

ஆனால் இப்போது இதெல்லாம் மாறிவிட்டது. விஷமுண்டு தற்கொலை செய்துக் கொள்வது தான் இப்போது அதிகமாக இருக்கிறது ஓடும் ரயில்களுக்கடியில் விழுந்து சாவது மற்றொரு முறை.

நோய், வறுமை, காதலில் ஏமாற்றம்-இவை காரணமாகவே அதிக தற்கொலைகள் ஏற்படுவதாக போலீஸ் இலாகாவின் தகவல்களிலிருந்து தெரிகிறது.

### சூரிய அடுப்புக்கு எதிர்ப்பு மனு

"எடுத்துக் கொள்" என இந்தியாவின் தாராளம்

புது டில்லி, பிப். 10—

சூரியனின் கதிர்களால் உணவு சமைக்கும் வகையில் சூரிய அடுப்பை இந்தியத் தேசிய ரசாயனச் சாலை கண்டுபிடித்தது. அந்த அடுப்பை தாங்கள் தயார் செய்துகொள்ள உரிமை தரவேண்டும் என்று எகிப்து சர்க்கார் இந்திய சர்க்காரைக் கேட்டது. கண்டுபிடித்த செலவிற்காக ஈடு செய்யவேண்டிய கட்டணமும் எகிப்துக்குக் கிடையாதாம்.

இருவகை சூரிய அடுப்புகளை இந்திய சர்க்கார் எகிப்து சர்க்காருக்குக் கொடுத்திருக்கிறது. ஒன்று, இந்தியப் பிரதிநிதி பணிக்கர் மூலமாகவும், மற்றொன்று எகிப்து மந்திரி இந்தியா வந்திருந்தபோது நேரிலும் கொடுக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

இதுபோன்ற கண்டுபிடிப்புகளை இந்தியாவில் இருந்து பெற்று வரும் எகிப்து போன்ற நாடுகள் இருப்பது வியப்புக்குரியதே!

### இங்கல்ல—அங்கே!

லண்டன், பிப். 8—

லண்டன் ஆஸ்பத்திரிகளில் நோயாளிகளுக்கு ஆகும் செலவு ஒருவருக்கு வாரத்தில் 24 பவுன் 18 ஷில்லிங் 8 அவுன்ஸ் ஆகிறதென்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

### திருமணங்கள்

நாகப்பட்டினம், பிப். 10—

8—2—54 திங்கள் காலை 10-மணிக்கு தோழர் கே. வி. ராமன் தலைமையில், கோவிந்தசாமிக்கும், தோழியர் உதயத்திற்கும் திருத்திய திருமணம் நடைபெற்றது. மணமக்களைப் பாராட்டி தோழர் கன்பர் அவர்களும், தோழர் கல்யாணமும் பேசினர். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 1. மணமக்களால் அளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்,—நன்றி—பொறுப்பாளர்.

* * *

குன்னூர், (நீலகிரி) பிப். 10—

1—2—54 திங்கட்கிழமை இரவு 10 மணிக்கு தோழர் டி. சிங்காரம் இல்லத்தில், தோழர் வீ. கா. ஒளியழகன் தலைமையில் தோழர் கே. சுப்ராசம்—தோழியர் எஸ் இரத்தினவதிசிர்திருத்த கலப்புத் திருமணம் நடைபெற்றது. இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 1 அன்பளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றியுடையது-பொறுப்பாளர்.

* * *

சென்னை, இராயபுரத்தில், 8—2—54 அன்று தோழர் எம். ஆறுமுகம், தோழியர் பருவதராஜகுமாரியை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொண்டார். திருமணம் திருத்திய முறையில், தோழர் என். ஜீவரத்தினம் தலைமையில் நடைபெற்றது. தோழர் முகவை—ஆர். எஸ். பாண்டியன் திருமணத்தை நடத்திவைத்து 'திருத்திய திருமணம்' குறித்துப் பேசினார். தோழர்கள் பார்த்தசாரதி, தங்கராஜ், ஜயசந்திரன் தோழியர் கிருஷ்ணாபாய் ஆகியோர் மணமக்களைப் பாராட்டிப் பேசினர்.

* * *

பெரியகுளம் தி. மு. கழகத் துணைச் செயலாளர் தோழர் எம். கே. ஆறுமுகத்திற்கும்—ராஜலட்சுமிக்கும் 5—2—54 காலை 9 மணிக்கு வணிக வைசிய குல அபிவிருத்தி சங்கத்தில், தோழர் கே. மாரிமுத்து தலைமையில் திருமணம் நடந்தேறியது. தோழர்கள் கே. எம் எம். மேத்தா, இரா. சங்கரன், பாண்டியன் ஆகியோர் 'திருமணம்' என்பது பற்றி பேசினர்.

# தூத்துக்குடி நிதிக்கு ரூ.1001

—(:)—

## திருப்பத்தூரில் (வட ஆற்காடு) ஐவர் வரவேற்பும் — நிதியளிப்பு விழாவும்

திருப்பத்தூர், பிப். 10—

7—2—54-ல். திருப்பத்தூர் (வ. ஆ.) நகர தி. மு கழக சார்பில், பொதுச் செயலாளர் அண்ணாதுரை, தோழர்கள் நெடுஞ்செழியன், மதியழகன், சம்பத், நடராசன் ஆகியோருக்கு வரவேற்பளிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஜி. சாமி (நாயுடு) பி.ஏ., பி.எல், தலைமை வகித்தார். கூட்டத்திற்கு 20,000 மக்களுக்கு மேல் வந்திருந்தனர். தி. மு. கழக சார்பில், வரவேற்பை செயலாளர் க. நெடுஞ்சேரமன் அளித்தார்.

தூத்துக்குடி சதி வழக்கு நிதிக்கு, நகர தி. மு. கழக சார்பில், ரூ. 1001-ம், தி. மா. மு. கழகச் சார்பில், 1001 காலணக்களும், பொன் வேலை தொழிலாளர் சார்பில், 301 காலணக்களும், உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் சார்பில், 1960 தம்பிடிகளும், அரங்கல்துர்க்கம் தி. மு கழகச் சார்பில், 301 காலணக்களும் அளிக்கப்பட்டது.

வரவேற்பிற்கு நன்றி தெரிவித்து, தலைவர்கள் அறிவுரை வழங்கினர். தி. மு கழகப் போராட்டங்கள் குறித்து விரிவுரையாற்றினர். செயலாளர் நன்றி கூறுதலுடன் வரவேற்பு விழா இரவு 10 மணிக்கு முடிவுற்றது.

## சென்னை மின்சார நிலையச் சட்டம்

### செல்லுபடியாகாது எனத் தீர்ப்பு

சுப்ரீம் கோர்ட் குறிப்பு

புதுடில்லி, பிப். 10—

சென்னை சர்க்காரின் "1949-ம் ஆண்டு சென்னை மின்சார விநியோக நிலையங்களை எடுத்துக் கொள்ளும் சட்டம்" செல்லுபடியாகாது என்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்தது.

சென்னை உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பை ஆட்சேபித்து, ராஜமகேந்திரபுரம் மின்சார விநியோகக் கம்பெனி செய்து கொண்ட அப்பீலில், சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளிக்கையில் மேற்படி சட்டத்தை இயற்ற சென்னை சட்டசபைக்கு அதிகாரமில்லை என்று குறிப்பிட்டது.

நில சம்பந்தமாகக் கட்டாயமாக எடுத்துக்கொள்ள மாகாண சட்டசபைக்கு, பாராளுமன்றம் திட்டமாக அதிகாரமளித்தாலும், அது, நேரடியாக, மத்திய அல்லது மாகாண சட்டசபைகளுக்கு தொழில் நிலையங்களை கட்டாயமாக எடுத்துக்கொள்ள சட்டமியற்ற அதிகாரமளிக்கவில்லை என்று தீர்ப்பில் குறிப்பிடப்பட்டது.

மேற்கண்ட சட்ட மன்றங்களில் ஒன்று இம்மாதிரி சட்டமியற்ற அதிகாரமளிப்பது கவர்னர்-ஜெனரலின் சந்தர்ப்ப அதிகாரத்திற்கு விடப்பட்டிருக்கிறது. பிரஸ்தாப சட்டத்தை நிறைவேற்ற சென்னை சட்டசபைக்கு கவர்னர்—ஜெனரல் அதிகாரமளித்ததாகத் தெரியவில்லை. ஆகவே இச்சட்டமியற்ற சென்னை அசெம்பிளிக்கு அதிகாரமில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## புதுக்கோட்டையில் திருக்குறள் வகுப்பு

7—2—54 ஞாயிறு மாலை 6 மணிக்கு அரிசிவாள் கட்டிடத்தில் திருக்குறள் வகுப்பு நடைபெற்றபோது, "குறளில் அரசியல்" என்பது பற்றி தோழர் சி. இலக்குவனார் அவர்கள் சொற்பொழிவாற்றினார்.

## அணுசக்தி பீரங்கி!

மாஸ்கோ, பிப். 10—

சோவியத் இராணுவத்திடம் பல்வேறு தரமுள்ள அணுசக்தி பீரங்கிகள் இருப்பதாகத் தெரிய வருகிறது.

சமீபத்தில் சோவியத் யூனியனில், ஐரோப்பியப் பகுதிகளில் நடந்த ஒத்திகைகளின்போது இவை உபயோகிக்கப்பட்டனவாம்.

## பொதுச் செயலாளர் அண்ணாதுரை சுற்றுப் பயணம்

| | | |
|---|---|---|
| பிப். | 14: | தென்னாற்காடு மாவட்டச் சார்பில், விழுப்புரத்தில் தூத்துக்குடி நிதி அளிப்புக் கூட்டம் |
| ,, | 15: | சென்னையில்—திருமணம் |
| ,, | 16 முதல் 19 வரையில்: | தஞ்சை மாவட்டம்: நாகப்பட்டணம் கோரடாச்சேரி, குடவாசல், கும்பகோணம் ஆகிய இடங்களில் தூத்துக்குடி நிதி அளிப்புக் கூட்டங்களுக்கும் அழைக்கப்பட்டிருக்கின்றார்கள். |
| ,, | 21: | மதுரை நகர் தி. மு. கழகப் பொதுக் கூட்டம். இ. வு-நாடகம் |
| ,, | 22: | பட்டிவீரன்பட்டி மறைந்த மாவீரர் ஊ. பு. அ. சௌந்திரபாண்டியன் அவர்கள் முதல் ஆண்டு நிறைவு விழா-இரவு நாடகம் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வார். |
| ,, | 23: | சிவகாசி நிதியளிப்புக் கூட்டம் |
| ,, | 28 முதல் மார்ச் 3 வரை | சேலம் மாவட்டம் சுற்றுப் பிரயாணம் |

## கழகக் கூட்டங்கள்

### வல்லம்படுகை

தி.மு. கழக ஆண்டு விழா

13—2—54 மாலை

தலைவர்: ஆர். பாலகுருசாமி

பேசுவோர்:

இரா. நெடுஞ்செழியன்

அ. பொன்னம்பலனார்

என். சிட்டப்பா

தாமோதரன்

★

### பத்தமடை

13—2—54 மாலை

பேசுவோர்:

என். எஸ். இளங்கோ

ஆ. திராவிடமணி

★

### நெல்லை

13-2-54 இரவு 7-30 மணிக்கு

தலைவர்: ஞானக்கண், பி.ஏ.

இடம்: தி. வி. க. திடல்

பேசுபவர்:

ஏ. வி. பி. ஆசைத்தம்பி

★

### விருதம்பட்டு

13—2—54 மாலை 6 மணிக்கு

பேசுவோர்:

க. அன்பழகன்

பூங்கோதை

## சேலம் நகர தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டம்

13-2-54 இரவு 9 மணிக்கு, செவ்வாய்ப்பேட்டை கழகத்தில் மேற்படி கூட்டம் நடைபெறும். அதுசமயம் 28—2—54-ல் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் சேலம் வருகிறபடியால், நகரத்தின் சார்பில் தூத்துக்குடி நிதி திரட்டி கொடுக்கும் விஷயமாய் கலந்தாலோசிக்க வேண்டியிருப்பதால் எல்லா உறுப்பினர்களும் குறித்த நேரத்தில் வரக் கோருகிறேன் என செயலாளர் அறிவிக்கிறார்.

## கிருஷ்ணகிரியில் பொதுச்செயலாளர் அண்ணாதுரை

—:-:—

### தூத்துக்குடி நிதிக்கு ரூ. 250 அளிக்கப்பட்டது

8—2—54 மாலை 6 மணிக்கு கிருஷ்ணகிரி தி மு கழகச் சார்பில், கார்னேஷன் திடலில், தூத்துக்குடி சதி வழக்கு நிதி அளிப்பு விழா கூட்டம் நடைபெற்றது. தோழர் டி. கிருஷ்ணமூர்த்தி கவுண்டர் எம். எல். ஏ., தலைமை வகித்தார். தி மு. கழக நோக்கம் பற்றியும், கூட்டத்தின் அவசியம் பற்றியும் தலைவர் பேசியபின் சேலம் மாவட்ட தி மு. கழக செயலாளர் தோழர் ஜி. பி. சோமசுந்தரம் பேசினார்.

கிருஷ்ணகிரி தி. மு. கழகச் சார்பில், தோழர் ஆர். வெங்கடாசலம் தூத்துக்குடி வழக்கு நிதிக்காக கூட்டத்தில் உண்டியலில் வசூலான ரூ. 20-10-3ம் சேர்த்து ரூ 250-ஐ பொதுச் செயலாளர் தோழர் அண்ணாதுரையிடம் அளித்தார்.

பின்னர் பல கிளைகளின் சார்பிலும், மாணவர் மன்றத்தின் சார்பிலும் தனிப்பட்ட நண்பர்களாலும், மலர் மாலைகள், நூல் மாலைகள் தோழர் அண்ணாதுரைக்கு அணிவிக்கப்பட்டது.

பிறகு பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள் தி மு. கழக போராட்டம் பற்றியும், திராவிடம் பிரியவேண்டியதின் அவசியம் குறித்தும் பேசினார். தலைவர் முடிவுரைக்குப் பின், தோழர் ஆர். வெங்கடாசலம் நன்றி கூறினார்.

## சென்னைக்கு அரிசி

### ஆந்திராவிலிருந்து வருகிறது

சென்னை, பிப். 10—

சென்னை சர்க்காருக்கு விற்பதற்காக வேண்டி 72,000 டன் அரிசியை ஆந்திரா சர்க்கார் கொள்முதல் செய்திருக்கிறார்கள். அவைகளை சரி பார்த்து ஏற்றுமதி செய்ய தணிக்கை அதிகாரிகளை அனுப்புமாறு சென்னை சர்க்காரை அவர்கள் கேட்டிருக்கிறார்கள்.

சென்னைக்கு 34,000 டன் அரிசியை ஏற்றுமதி செய்ய தனிப்பட்ட வியாபாரிகளுக்கு ஆந்திர சர்க்கார் அனுமதி கொடுத்திருக்கிறார்கள்.

## மாணவர் மன்ற எஸ். எஸ். எல். சி. தமிழ்த் தேர்வு

சென்னை, பிப். 10—

சென்னை மாணவர் மன்ற எட்டாம் வகுப்புத் தமிழ்த் தேர்வு 13—2—54 சனி பிற்பகல் 2 மணி முதல் 4 மணி வரை தமிழ்நாடெங்கும் உள்ள உயர்தர ஆரம்பப் பள்ளிகளில் நடைபெறும்.

## சிருங்கேரி ஆதீன இனும் நிலம் ரத்து!

### மைசூர் பிரதமரின் ஆதரவு

பிரைப்பூர், பிப். 11—

சிருங்கேரியில் உள்ள சங்கர மடத்துக்குச் சொந்தமான இனும் நிலங்களை மைசூர் சர்க்கார் ரத்து செய்துவிட்டது. அது பற்றி கூறிய மைசூர் பிரதமர், இனும் நிலம் எடுத்துக் கொள்ளப்பட்ட போதிலும், உத்தேசிக்கப்பட்டுள்ள நிலச் சீர்திருத்த மசோதா, மடத்துக்குக் கிடைத்துவந்த வருமானத்திற்கு ஆபத்து ஏற்படாமல் பார்த்துக் கொள்ளும் என்று குறிப்பிட்டார்.

## தொழிலாளருக்கு வீடுகள்

### டில்லி சர்க்கார் உதவி

புதுடில்லி, பிப். 10—

சர்க்கார் சகாயத்துடன் தொழிலாளருக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கான 1953—54-ம், ஆண்டுத் திட்டத்தின் கீழ் இந்திய சர்க்கார் 4,907 'டெனமெண்ட்' குடியிருப்புகளைக் கட்டிக் கொடுப்பதற்காக 1953 டிசம்பர், 1954 ஜனவரி மாதங்களில் மொத்தம் 1,18,44,935 ரூபாய் மானியமாக அளித்திருக்கிறார்கள்.

## திராவிட நெறி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மனிதத் தன்மையை அற்ற திருவிழா—அதில் பெருவாரியான தாய்மார்கள்தான் கொல்லப்பட்டதாக அறிகிறோம். இந்தக் கொலைக்கெல்லாம் யார் பொறுப்பு—இந்த மதவெறி சர்க்கார்தான். இந்த சர்க்காரின் பக்கபலத்தாலேதான் அது நடைபெற்றது.

இந்த மத வெறிச் சர்க்கார்தான், நம் தோழர்களுக்கு—கண்ணியமான முறையில்-அமைதியாக ரயில் நிறுத்தத்தில் ஈடுபட்ட நம் அருமைத் தோழர்களுக்கு—3½ ஆண்டு தண்டனை தந்திருக்கிறது. அப்படியானால்—கும்பகோணத்தில் நடந்த கொலைக்கு இந்த சர்க்காருக்கு 30 ஆண்டுத் தண்டனை தரவேண்டாமா? நம் தென்னாட்டில் இதுபோன்ற கும்பமேளாக்கள் நடைபெறுது—நம் அறிவியக்கப் பணி தொடர்ந்தாற்றும் வரை!

## முகவரி மாற்றம்

வி. கே. தங்கமணி, தி. மு. க. செயலாளர், C/O சி. எஸ். தங்கமுத்து, சைக்கிள் ஷாப், வெள்ளகோவில் போஸ்ட், வழி: ஈரோடு, ஆர்.எம்.எஸ்.

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்

## திராவிட மாணவர் முன்னேற்றக் கழக தூத்துக்குடி வழக்கு நிதி அளிப்பு

12—2—54 வெள்ளி மாலை 5-30 மணிக்கு சென்னை கோகலே மண்டபத்தில்

☆

தலைவர்: கே. மனோகரன்

☆

பொதுச்செயலாளர் அண்ணாதுரை,

| | |
|---|---|
| ஈ. வெ. கி. சம்பத் | மு. கருணாநிதி |
| இரா. நெடுஞ்செழியன் | என். வி. நடராசன் |
| அ. பொன்னம்பலனார் | கே. ஏ. மதியழகன் |

ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

☆

நன்கொடை: அணா எட்டு

—சென்னை திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அருணி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (26, குரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.